**Coral Holidays**
*Crafting Tours Since 1996*



நவம்பர் 30க்குள் முன்பதிவு செய்பவர்களுக்கு

**ரூ.8000 தள்ளுபடி**

# கைலாயம் மானசரோவர்

## விமானம் மற்றும் ஹெலிகாப்டர் பயணம்

**11 நாட்கள் /10 இரவுகள் | லக்னோ முதல் லக்னோ வரை**

**புறப்படும் தேதி : 10 & 11 & 12 ஜீன் 2027**

**குறிப்பு :** லக்னோ போய் திரும்பும் விமான டிக்கெட்டுகள் சீன விசா கிடைத்த பிறகே போடப்படும்.

### பயணக்கட்டணம்

# $ 2780 + ₹ 89,000

(7% GST மற்றும் TCS சுமார் ₹24,500 சேர்த்து)

தோராயமாக **₹3,48,200** இன்றைய டாலர் விலையில்

⚠ சீனா மற்றும் நேபாளத்தில் நிலவும் சூழ்நிலைக்கேற்ப கட்டணத்தில் மாற்றம் வரலாம்.

நீங்கள் முன்பணம் கொடுத்ததும் அட்டவணையில் உள்ள பயண கட்டணத்தில் சேர்வது, சேரர்த்து, இதர செலவுகள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை படித்துவிட்டீர்கள் என்று எடுத்துக்கொள்வோம்

மேலும் தகவலுக்கு : **+91 94433 43206**

உடன் பதிவு செய்ய : **+91 90256 98963**



| மதுரை | மற்றும் தமிழ்நாடு பகுதிக்கு | பெங்களூரு |
|---|---|---|
| +91 94875 43206 | +91 99524 10198 | +91 97426 62626 |

**பகதூர்**
35+ ஆண்டுகள் அனுபவம்
+91 94433 43206

நாங்கள் பெருமையுடன் உறுப்பினராக உள்ளோம்

IATA Accredited Agent | BNI | JCI | Tamil Nadu where stories never end

## கைலாய அட்டவணை சுருக்கமாக

## புறப்படும் தேதிகள் 10 & 11 & 12 ஜூன் 2027

| நாள் | தேதி 2027 | கிழமை | விவரங்கள் | இரவு தங்குமிடம் |
|---|---|---|---|---|
| 1 | ஜூன் 10 | வியாழன் | சென்னை → லக்னோ விமானம்; லக்னோ → நேபாள்கஞ் சாலைப் பயணம் | நேபாள்கஞ் |
| 2 | ஜூன் 11 | வெள்ளி | நேபாள்கஞ் → சிமிகோட் விமானம்; சிமிகோட் → ஹில்சா ஹெலிகாப்டர் | ஹில்சா |
| 3 | ஜூன் 12 | சனி | ஹில்சா → தக்ளாகோட் வாகனம்; சீன இமிகிரேஷன் முடித்தல் | தக்ளாகோட் |
| 4 | ஜூன் 13 | ஞாயிறு | தக்ளாகோட் → மானசரோவர் வாகனம்; கயிலாயம் மானசரோவர் தரிசனம் மற்றும் பூஜை | மானசரோவர் |
| 5 | ஜூன் 14 | திங்கள் | மானசரோவர் → தார்ச்சன் வாகனம்; கைலாஷ் தெற்கு முகம் தரிசனம் | தார்ச்சன் |
| 6 | ஜூன் 15 | செவ்வாய் | கிரிவலம் முதல் நாள்; யமத்வார் வழியாக சென்று கைலாஷ் வடக்கு முகம் தரிசனம் | தேராபுக் |
| 7 | ஜூன் 16 | புதன் | கிரிவலம் இரண்டாம் நாள்; டோல்மா லா கணவாய் கடந்து பயணம் | சுத்துல்புக் |
| 8 | ஜூன் 17 | வியாழன் | கிரிவலம் நிறைவு; சுத்துல்புக்→ தக்ளாகோட் வாகனம் | தக்ளாகோட் |
| 9 | ஜூன் 18 | வெள்ளி | தக்ளாகோட், சீன இமிகிரேஷன்→ ஹில்சா வாகனத்தில் திரும்புதல் | ஹில்சா |
| 10 | ஜூன் 19 | சனி | ஹில்சா → சிமிகோட் ஹெலிகாப்டர்; சிமிகோட் → நேபாள்கஞ் விமானம் | நேபாள்கஞ் |
| 11 | ஜூன் 20 | ஞாயிறு | நேபாள்கஞ் → லக்னோ வாகனம் & லக்னோ → சென்னை பயணம் | — |

## உங்கள் கைலாயப் பயணத்தை

## மேலும் சிறப்பாக்க,

## கோரல் யாத்ரா வழங்கும்

# கூடுதல் சிறப்பு அன்பளிப்புகள்!

# விரைவில் எதிர்பாருங்கள்!

# கைலாய தற்காலிக பயண அட்டவணை




சென்னையிலிருந்து லக்னோக்கு நேரடி விமானத்தில் காலை புறப்பட்டு லக்னோ அடைந்து ரோடு வழியாக 200 கிமீ 5 மணி நேரம் பயணம் செய்து நேபாள் நாட்டில் உள்ள நேபாள்கஞ் போவோம். (நேபாளம் இந்தியாவை விட 15 நிமிடங்கள் முன்னால் உள்ளது. அதாவது, சென்னையில் நேரம் காலை 10 மணி என்றால், நேபாளத்தில் காலை 10:15 மணி). இந்நேரம் உங்கள் பாஸ்போர்ட்டுகள் உங்களிடம் இருக்காது.

நாங்கள் சுற்றுப்பயணத்தைத் தொடங்குவதற்கு 90 நாட்களுக்கு முன்பு உங்கள் பாஸ்போர்ட்டை வாங்கி திபெத் விசாவிற்காக சீன டில்லி தூதரகத்திடம் குடுத்திருப்போம். எனவே நேபாளத்திற்குள் நுழைய உங்கள் அசல் வாக்காளர் அடையாள அட்டை இந்த இடத்தில் தேவைப்படும். உங்கள் அசல் வாக்காளர் அடையாள அட்டையை நீங்கள் கொண்டு வரவில்லை என்றால் உங்களை நேபாள நாட்டிற்குள் அனுமதிக்க மாட்டார்கள். இதற்கு நாங்கள் பொறுப்பல்ல. அசல் வாக்காளர் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் காப்பி ஏற்றுக்கொள்ளப்படாது/செல்லாது. தவறு நேரும் பட்சத்தில் நீங்கள் திரும்ப உங்கள் ஊருக்கு போக நேரிடும். சில்வர் ஹாலோகிராம் கொண்ட அசல் வாக்காளர் அடையாள அட்டை வாங்க நிறைய நேரம் உள்ளது. எனவே, இப்போதே விண்ணப்பித்து வாங்குங்கள்.

இந்த எல்லையில் இம்மிக்ரேஷன் மற்றும் கஸ்டம்ஸ் முடித்து பின் மறுபடியும் 10 கிமீ தூரம் பயணம் செய்து ஹோட்டலுக்கு போவோம். மாலையில் கைலாய பயண கலந்துரையாடல் மற்றும் நாங்கள் கொடுக்கும் பெரிய ஜிப் பை, கிரிவலம் போகும் சமயம் எடுத்துச்செல்ல சிறிய முதுகுப் பை, குளிர் தாங்கும் டவுன் ஜாக்கெட் கொடுத்து, உங்கள் அசல் பாஸ்போர்ட்டையும் உங்கள் கையில் கொடுத்து விபரங்களை பேசுவோம். நீங்கள் கொண்டு வந்துள்ள துணிமணிகளை மருந்துகளையும் சரிபார்த்து மறுபடியும் கைலாய பயண சாமான்களை பெரிய ஜிப் பைக்கு மாற்றுவோம். நீங்கள் கொண்டுவரும் பெட்டிகளை நேபாள்கஞ் ஹோட்டலில் வைத்துவிட்டு செல்வோம்.

**உணவு: மதியம் / இரவு**
**தங்கும் இடம்: நேபாள்கஞ் ஹோட்டல் (700 அடி உயரத்தில்)**




காலையில் நேபாள்கஞ்சிலிருந்து சிறிய விமானங்களில் சிமிகோட் 9250 அடி 40 நிமிட பயணம். பின் ஹெலிகாப்டரில் ஹில்ஸா 11950 அடி 25 நிமிட பயணம். இதுவரை நேபாள நாடு. குளிரும். அதற்குண்டான உடைகளை அணிய வேண்டும்.

**உணவு: காலை / மதியம் / இரவு**
**தங்கும் ஊர்: ஹில்சா**




ஹில்ஸாவில் நேபாளை விட்டு வெளியேறும் சீல் வைத்து கர்னாலி நதியின் மேல் உள்ள ஒரு சிறு இரும்பு தொங்கும் பாலத்தை கடந்து சீனா (திபெத்) எல்லை வருவோம். இங்கிருந்து நாம் சீன இராணுவத்தின் கடுமையான கட்டுப்பாட்டில் இருப்போம். சீன வாகனங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. அவை சீன வழிகாட்டியின் கடுமையான கட்டுப்பாட்டில் தான் இருக்கும். சீனா (திபெத்) பக்கம் நடந்து வந்து அங்கிருக்கும் சீன இமிகிரேஷன் அதிகாரிகளிடம் நம் பாஸ்போர்ட்டுகளை காட்டி அவர்கள் சொல்லும் போது வரும் சீன வாகனத்தில் இமிகிரேஷன் கட்டிடத்திற்கு போய் இமிகிரஷன் முடித்து மறுபடியும் சீன வாகனத்தில் தக்ளாகோட் (புறங்) என்ற ஊருக்கு போய் கஸ்டம்ஸ் வேலைகளை முடித்து நாம் தங்கும் ஹோட்டலுக்கு சென்று உணவுண்டு அறைகளுக்கு செல்வோம். இங்கு அநேகமாக டபுள்ஸ் பாத்ரூம்கள் அட்டாச்ட் அறைகள் கிடைக்கலாம். 4 மாடி ஹோட்டல். லிப்ட் கிடையாது. மெதுவாக ஏறி போகலாம். மலை ஏற கொஞ்சம் பயிற்சி என்று நினைத்துக்கொள்ள வேண்டும். திபெத்தில், இந்திய நேரத்தை விட 2 மணி 30 நிமிடங்கள் முன்னதாக இருக்கும். ஆகவே, கடிகாரத்தின் நேரத்தை அதற்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டும்.

உணவு: காலை / மதியம் / இரவு

தங்கும் ஊர் : தக்ளாகோட்




காலை உணவுக்குப்பின் மானசரோவர் போக பெர்மிட் வந்தவுடன் (இனி நம்முடன் வரும் சீன ஏஜெண்ட்டின் கட்டுப்பாட்டுக்குள் தான் எல்லாம் : சீன ஏஜெண்ட் சொன்னால் தான் வாகனம் வரும்) மானசரோவர் கைலாயம் முதலில் தெரியும் இடம் வரை ஒரு வாகனத்தில் பயணித்து பின் ECO friendly வாகனத்தில் மானசரோவர் ஏரியை பாதி கிரிவலம் செய்து மானசரோவர் கரையில் நாம் தங்கும் விடுதிக்கு செல்வோம்.

இங்கு தங்கும் இடம் மிக மிக சுமாராகத்தான் இருக்கும். டாய்லெட் மிக மிக மோசம். ஆகவே ஆண் பெண் எல்லோரும் இருட்டில் வெளியில் தான் போவார்கள். அங்கு தான் அந்த நேரம் புண்ணிய ஸ்நானம் முடியுமா என்று பார்க்க வேண்டும். கண்டிப்பாக முயற்சி செய்வோம். 3 நாட்கள் கிரிவலம் போக குதிரை ஆள், குதிரை, உதவியாளர் ஆகிய மூன்றுக்கும் சேர்த்து பணத்தை நம்மிடம் வசூல் செய்து இரவோடு இரவாக போய் குதிரை ஆள், குதிரை, உதவியாளர்களை பிடிக்க சீன ஏஜெண்ட் போய் விடுவார். இனி நீங்கள் கிரிவலம் வரவில்லை என்றாலும், முதல் இரண்டு நாட்கள் தான் கிரிவலம் வந்தாலும் எந்த பணமும் திரும்ப வராது.

உணவு: காலை / மதியம் / இரவு (காலை உணவை தவிர இன்று மற்ற இரு வேளை உணவுகளும் கொஞ்சம் முன்ன பின்னத்தான் ஆகும்)
தங்கும் ஊர்: மானசரோவர் 14850 அடி




அதிகாலை பிரம்ம முகூர்த்த வேலை 3 முதல் 6 மணி வரை தேவர்கள் ஒளி ரூபத்தில் மானசரோவரில் இறங்க வருவதை பார்க்க போவோம். சில சமயம் தெரியும் தெரியாது காலை உணவுக்குப் பிறகு, தார்ச்சன் பயணம் 40 கிமீ. நாம் தங்குமிடத்திலிருந்து தெற்கு முகம் Lapis Lazuli (ஊதா கலர்) நிறத்தில் இருக்கும். இது தட்சிணா மூர்த்தி முகம் என்றும் அழைக்கப்படுகிறது. இதன் நெற்றியில் தான் சப்தரிஷி குகைகள் இருக்கின்றன. அங்கு செல்வதற்கு இளம் கால்கள் வேண்டும்; ஒரு நாள் கூடுதலாக வேண்டும்: இந்த கிரிவலத்தின் பெயர் நந்தி கிரிவலம்; அஷ்டபத் என்ற இடத்திலிருந்து இந்த கிரிவலம் ஆரம்பமாகும். கைலாய மலை கிரிவலத்தில் நந்தி மலை இந்த ஒரு இடத்தில் தான் தெரியும். கைலாய மலைக்கு முன்னால் உள்ள ஒரு சிறிய மலை, நந்தி சிவபெருமானின் முன் மண்டியிடுவது போல் தெரிகிறது.(2026-ல் இந்த இடத்திற்குச் செல்ல பெர்மிட் கிடைக்கவில்லை.)

**உணவு: காலை / மதியம் / இரவு**
**தங்கும் ஊர்: தார்ச்சன்**




முதல் நாள் கிரிவலம் 13 கிமீ. முதல் நாள் கிரிவலம் ஆரம்பமாகும் இடமான எம தர்மராஜா கோவில் அருகில் போய் வரிசையில் நின்று சீட்டு போட்டு குதிரையை எடுத்து பின் மறுபடியும் சீட்டு போட்டு உதவியாளரையும் எடுத்து பக்கத்தில் இருக்கும் எம தர்மராஜா கோவிலில் கும்பிட்டு குதிரையில் ஏறி 13 கிமீ பயணம். வழியில் மேற்கு முகம் தரிசனம் பார்த்து தேராபுக் செல்வோம். பின்பு வடக்கு முகமாகிய தேராபுக் அடைந்து டார்மிட்டரி மாதிரி அறைகளில் தங்க வேண்டும். ஜோடியாக வருபவர்கள் மற்றவர்களுடன் தான் தங்க வேண்டும். இரவு சுமார் 8 மணிக்கு மேகங்களை பொறுத்து பொன்னான மேனியை பார்க்கலாம். இங்கு வடக்கு முக அடிவாரம் சரண் ஸ்பர்ஸ் என்று பெயர். இங்கு போக 7 கிமீ வர 7 கிமீ; கடைசி 3 கிமீ இடுப்பளவு பனியில் நடக்க வேண்டும். இங்கு போக அனுமதி கிடையாது.

தெற்கு முகம்: Lapis Lazuli (கரும் ஊதா நிறம்)
மேற்கு முகம்: Ruby (கரும் சிகப்பு நிறம்)
வடக்கு முகம்: Gold (தங்க நிறம்)
கிழக்கு முகம்: Crystal (கிரிஸ்டல் நிறம்)

உணவு: காலை / மதியம் / இரவு (மிகவும் சாதாரணமாக இருக்கும்).
தங்கும் இடம்: தேராபுக் 15750 அடி




இரண்டாம் நாள் கிரிவலம் 22 கிமீ. கடினமான நாள். சீக்கிரமாக காலை சிம்பிள் உணவை சாப்பிட்டு கொஞ்ச தூரம் மெதுவாக நடந்து பாலத்தை தாண்டி குதிரையில் ஏறி 6 கிமீ 18520 அடி உயரத்தில் உள்ள ( DOLMA LA) என்ற மலை உச்சியில் குதிரை நம்மை இறக்கி விட்டு கீழே போய் நிற்கும். காரணம் இறங்கும் பாதை குதிரைக்கு செங்குத்தாக இருப்பதாலும் சிறு சிறு பாறைகள் கொண்டாக இருப்பதாலும் (இந்த சிறு சிறு பாறைகள் குதிரையை வழுக்க செய்யலாம் அல்லது இந்த சிறு சிறு பாறைகள் இடையே உள்ள இடங்களில் குதிரையின் குளம்பு சிக்கி நாமும் கீழே விழுவோம்; குதிரையின் கால் உடைந்து போகும் என்பதால்) குதிரை நம்மை இந்த இறக்கத்தில் ஏற்றி செல்ல இயலாது. இந்த இடத்தை பார்வதிக்கு சொந்தமான இடம் என்று சொல்வார்கள். இங்கிருந்து (உதவியாளருடன்) கீழே நடக்கும் போது பச்சை நிறத்தில் ஒரு ஏரி கீழே தெரியும். இந்த ஏரியின் பெயர் கௌரி குண்டம் ஏரி. பார்வதி தேவி சிவபெருமான் பாதங்களை பூஜை செய்ய இங்கிருந்து தான் தினமும் நீர் எடுத்து செல்வதாக நம் ஐதீகம். 6 கிமீ இந்த இறக்கத்தில் நமக்கு (உதவியாளராக வருபவரின் கைகளை பிடித்து) கீழே வந்து மீண்டும் குதிரையில் ஏறி 10 கிமீ பயணம் செய்து நாம் தங்கும் இடமான சுத்துல்புக் சுமார் மாலை 4 மணிக்கு அடைவோம். இங்கு தங்கும் இடம் மறுபடியும் டார்மிட்டரி தான். டாய்லெட் வெளியில் தான்.

உணவு: காலை / மதியம் / இரவு
தங்கும் இடம்: சுத்துல்புக் 15500 அடி




மூன்றாம் நாள் கிரிவலம் 8 கிமீ. காலை 9 மணியளவில் குதிரையில் கிரிவலம் முடிவடையும் இடமான ஜோ.்.பே எனப்படும் இடத்திற்கு வருவோம். இங்கே மானசரோவர் முதல் தக்ளாகோட் வரை அழைத்துச் செல்ல வாகனங்கள் காத்திருக்கும்.

உணவு: காலை / மதியம் / இரவு
தங்கும் ஊர்: தக்ளாகோட்




தக்ளாகோட்டில் கஸ்டம்ஸ் இமிகிரேஷன், விசா மற்றும் சுங்கச்சாவடி முடித்து ஹில்சா பயணம். உங்கள் கனவு பயணம் நிறைவேறிய சந்தோஷத்தில் சிவபெருமானுக்கு நன்றி சொல்லி ஹில்ஸாவில் தங்குவோம்.

உணவு: காலை / மதியம் / இரவு
தங்கும் ஊர்: ஹில்சா




ஹெலிகாப்டரில் சிமிகோட் பயணம். பின் விமானத்தில் நேபாள்கஞ் பயணம்.

உணவு: காலை / மதியம் / இரவு
தங்கும் ஊர்: நேபாள்கஞ்




காலை உணவுக்குப் பின் 200 கி.மீ. லக்னோ பயணம். பின்னர் இண்டிகோ விமானம் மூலம் அவரவர் ஊர்களுக்குப் பயணம்.

உணவு: காலை

# கைலாய பயணக்கட்டணத்தில் சேர்வது :

1. உணவு: 11 நாட்கள் பயணத்திற்கான நேபாள்கஞ்சில் மதிய உணவு முதல், பயணத்தின் கடைசி நாள் காலை உணவு வரை சைவ உணவு வழங்கப்படும்
2. பல முறை கயிலாயம் சென்ற கோரல் ஹாலிடேஸ் உரிமையாளர் யாத்திரை முழுவதும் உங்களுடன் இருப்பார்.
3. 10 இரவுகள் தங்குமிடம்.
4. நேபாளம், திபேத் மற்றும் சீனா அனுமதிகள் மற்றும் சீன விசா.
5. நேபாளம் மற்றும் திபேத்தில் ஏசி இல்லாத வாகனங்கள்; லக்னோ நேபாள்கஞ் லக்னோ பயணத்தில் க்ரிஸ்டா ஏசி வாகனம்.
6. நேபாள்கஞ் - சிமிகோட் - நேபாள்கஞ் விமான பயணம்.
7. சிமிகோட்- ஹில்சா - சிமிகோட் ஹெலிகாப்டர் பயணம்.
8. நேபாள விமான நிலைய வரிகள்.
9. கொஞ்சம் ஆங்கிலம் மற்றும் ஹிந்தி பேசும் நேபாளம் மற்றும் சீனா வழிகாட்டிகள்.
10. அவசர ஆக்சிஜன் வசதி.
11. உறுதியான, பெரிய ஜிப் பை (உங்கள் சூட்கேஸ்கள் நேபாள்கஞ்சில் இருக்கும்).
12. 3 நாள் கிரிவலத்தின் போது அவசியமான பொருட்களை மட்டுமே எடுத்துச் செல்ல ஒரு சிறிய முதுகு பை .
13. கடுமையான குளிரைத்தாங்கும் ஜாக்கெட்
14. அனைத்து நுழைவு கட்டணங்களும்.
15. யாத்திரை முடித்ததுக்கான சான்றிதழ் வழங்கப்படும்
16. மானசரோவரில் பூஜை செய்ய குளிர் மற்றும் காற்றிலிருந்து பாதுகாப்புள்ள கட்டிட கட்டணம்.
17. **GST** மற்றும் **TCS** (சுமார் ₹ 24,500)

# கைலாய பயணக்கட்டணத்தில் சேராதது :

1. உங்கள் இருப்பிடத்திலிருந்து லக்னோ வரையிலான விமான மற்றும் ரயில் கட்டணங்கள்.
2. உங்கள் தனிப்பட்ட செலவுகள்: தொலைபேசி, சலவை , பானங்கள், மினரல் வாட்டர் முதலியவை.
3. அவசர நிலை மீட்புச் செலவுகள், அவசர ஹெலிகாப்டர், மருத்துவ மற்றும் போக்குவரத்து செலவுகள்.
4. விமான தாமதங்கள் மற்றும் ரத்துசெய்தல் காரணமாக கூடுதல் தங்கும் நாட்களின் செலவுகள்.
5. 'கயிலாயம் மானசரோவர்' பாலிசி என்ற பெயரில் ICICI Lombard-ல் வெளிநாட்டு மருத்துவ காப்பீடு உள்ளது. உங்கள் இன்சூரன்ஸ்காரர்களிடம் கயிலாயம் மானசரோவர் என்ற பெயரில் உள்ள பாலிசியையே குறிப்பாக வாங்குங்கள்.
6. வாகனம் அட்டவணை படி மட்டுமே பயன்படுத்தப்படும்; அதற்குமாறாக பயன்படுத்தினால் கூடுதல் கட்டணங்கள் பொருந்தும்.
7. குதிரை, அவசர ஹெலிகாப்டர், டோலி, கேபிள் கார், ஆட்டோ முதலியவற்றின் செலவுகள் (நாங்கள் வழங்கிய வாகனத்திற்கு மாற்றாக ஏற்படும் செலவுகள்)
8. கிரிவலம் பயணத்தில் குதிரை மற்றும் குதிரைக்காரருக்கான கட்டணம் 2026-ஆம் ஆண்டில் சுமார் 4,100 சீன யுவான், உதவியாளருக்கான கட்டணம் 1,500 யுவான், மேலும் சொந்த செலவுகளுக்காக குறைந்தபட்சம் 1000 யுவான் தேவைப்படலாம். உதவியாளர் தேவை என்றால் எடுத்துக் கொள்ளலாம் (விலைகளில் மாற்றம் இருக்கலாம்).
9. வழிகாட்டிகள், டிரைவர்கள், சமையல்காரர்கள், கிளீனர்கள் , ஷெர்பாக்கள் முதலியோருக்கான டிப்ஸ் ரூ. 2,000 கயிலாய கிரிவலம் முடித்து திரும்பும் சமயத்தில் தக்ளாகோட்டில் நீங்களே வசூல் செய்து பட்டுவாடா செய்ய வேண்டும்.

10. திபேத் பயணத்தின் போது ஒருவருக்கு உடல் நலம் பாதிக்கப்பட்டு லக்னோவுக்கு திரும்ப வேண்டியிருந்தால், வாகனம், ஷெர்பா, உணவு, குழு விசா ரத்து செலவுகள் (திபேத் நேபாள எல்லை வரை) மற்றும் நேபாள எல்லையிலிருந்து லக்னோ வரை வாகன செலவுகள் சுமார் ₹ 75,000.

11. கிரிவலம் /கோராவுக்கு வர முடியாதவர்கள் அல்லது முதல் நாள் மட்டும் முடித்து திரும்பும் பயணிகள் தார்ச்சனில் தங்குவதற்கும் உணவிற்கும் செலவு ஒரு நபருக்கு ஒரு நாள் ரூ. 3,000.

12. செல்லப்படாத இடங்கள் அல்லது தங்காத இடங்களுக்கான பணம் திரும்பப்பெற முடியாது.

13. நாங்கள் வழங்கும் உணவை தவறவிட்டால் வெளியில் உணவு சாப்பிட்டதற்கான பணம் கேட்க முடியாது.

14. அட்டவணை படி தங்க முடியாமல் வேறு இடங்களில் தங்க வேண்டிய நிலையில் ஏற்படும் செலவுகள் உடனுக்குடன் அங்கேயே கட்ட வேண்டும்.

15. இயற்கை பேரிடர்கள் போன்ற மனிதர்களால் கட்டுப்படாத காரணங்களால் ஏற்படும் செலவுகள்.

16. குறிப்பிடாத செலவுகள்.

17. கிரிவலம் மற்றும் பயணம் செய்யும் பொது ஆம்புலன்ஸ் தேவைப்பட்டால், அதற்கான கட்டணத்தை அந்த இடத்திலேயே நேரடியாக செலுத்த வேண்டும்.

18. அஷ்டபத் சென்றால், வாகனக் கட்டணம் சுமார் 600 சீன யுவான். (2026-ல், திபெத் அதிகாரிகளால் இந்த இடத்திற்குச் செல்ல பெர்மிட் வழங்கப்படவில்லை.)

19. எதிர்பாராத சூழ்நிலைகளால் பயணம் திட்டமிடப்பட்ட 10 இரவுகளை தாண்டி நீட்டிக்கப்பட்டால், ஒவ்வொரு நாளுக்கும் அன்றே அங்கேயே உடனுக்குடன் பணம் கட்ட வேண்டும்.

| 2027 கைலாய யாத்திரையின் முக்கிய செலவு விவரங்கள் | | |
|---|---|---|
| செலவின் பெயர்கள் | எங்களிடம் கொடுக்கும் பணம் | நீங்களே கொடுக்கும் பணம் |
| பயணக்கட்டணம் | USD 2780 + INR 89,000 (சுமார் ₹ 3,48,200) | |
| சென்னை முதல் லக்னோ வரை சென்று திரும்பும் தோராயமான விமான கட்டணம் | | 20,000 |
| 3 நாட்கள் கிரிவலத்திற்கான குதிரை கட்டணம் 4100 யுவான் × ரூ. 15 தோராயமாக | | 61,500 |
| மொத்தம் | USD 2780 + INR 89,000 (சுமார் ₹ 3,48,200) | 81,500 |

**குறிப்பு : லக்னோ போய் திரும்பும் விமான டிக்கெட்டுகள் சீன விசா கிடைத்த பிறகே போடப்படும்.**







2025,2026 கோரல் ஹாலிடேஸ் குழுவின் கயிலாய யாத்திரை புகைப்படங்கள்

# குறிப்புகள்

1. முன் பணம் ₹53,000 செலுத்திய பின்னர், அடுத்த நாள் பயணத்தில் கலந்து கொள்ள முடியாது எனத் தெரிவித்தால், சீன பெர்மிட்டிற்கான ₹53,000 சீனர்களால் தொகை பிடித்தம் செய்யப்படும்.
2. ₹53,000 முன்பணத்துடன் ஒரிஜினல் பாஸ்போர்ட் உங்களிடமிருந்து பெறப்படும். பாஸ்போர்ட்டை அனுப்புவதற்கு முன், 2 ஜெராக்ஸ் காப்பிகள் எடுத்து வைத்துக்கொள்ளுங்கள்.
3. டாலர் தொகையை யாத்திரை தொடங்குவதற்கு 60 நாட்களுக்கு முன்பாகக் கட்டாயமாக செலுத்த வேண்டும். டாலர் நீங்கள் வாங்கும் போது உங்களுக்கு விமான டிக்கெட், பெர்மிட் மற்றும் விசா நகல் வழங்க இயலாது. காரணம், அந்த நேரத்தில் இந்த 3ம் வந்திருக்காது.
4. முழு கட்டணம் செலுத்திய பிறகு பயணத்தை ரத்து செய்தால், செலுத்திய தொகை எக்காரணம் கொண்டும் சீனர்கள் திருப்பி கொடுக்கமாட்டார்கள்.
5. உங்கள் பாஸ்போர்ட் மார்ச் 2028 வரை செல்லுபடியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.
6. அசல் வாக்காளர் அடையாள அட்டையை (சில்வர் ஹோலோக்ராம் இருந்தால் நல்லது) கொண்டு வர வேண்டும். சில்வர் ஹாலோகிராம் கொண்ட அசல் வாக்காளர் அடையாள அட்டை வாங்க நிறைய நேரம் உள்ளது. எனவே, இப்போதே விண்ணப்பித்து வாங்குங்கள்.
7. மருத்துவ காரணமின்றி, திபெத் பகுதியில் திட்டமிட்ட பயணத்தை முடிப்பதற்கு முன்பாக யாத்திரிகர்கள் குழுவிலிருந்து தனியாக வெளியேறினால், ஒரு நபருக்கு ஒரு நாளுக்கு USD 200 அல்லது அதற்கு மேல் அபராதமாக திபெத் T.A.R. Foreign Exchange Center (FEC)-க்கு செலுத்த வேண்டியிருக்கும். மேலும், விசா பிரிப்பு கட்டணம், தங்குமிடக் கட்டணம் மற்றும் போக்குவரத்துக் கட்டணங்கள் தனியாக வசூலிக்கப்படும்
8. உங்கள் அடுத்த வெளி நாட்டு பயணத்தை நீங்கள் ஜீலை 15, 2027 தேதிக்கு மேல் வைத்து கொள்ளுங்கள்.
9. அதிக விலை உயர்ந்த பொருட்கள் மற்றும் தங்க நகைகளை கொண்டு வர வேண்டாம்.

## நீங்கள் யாத்திரை பதிவு செய்ய கீழ் கண்டவைகளை கொடுக்க வேண்டும்:

1. நீங்கள் யாத்திரை பதிவு செய்யும் போது முதல் பகுதி முன் பணம் ₹ 53,000 மற்றும் உங்கள் ஒரிஜினல் பாஸ்போர்ட்.
2. யாத்திரை தொடங்குவதற்கு 60 நாட்களுக்கு முன்பு ₹36,000 + $2780.
3. பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 8, குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின்படி கொடுக்க வேண்டும்.
4. விசா தகவல் படிவத்தை முழுமையாகப் பூர்த்தி செய்யவும்.
5. S.No. 3 & 4 ஆகியவற்றை மடிக்காமல், கடைசி பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள விலாசத்திற்கு அனுப்புங்கள்.

பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் 8 தேவை. நாங்கள் கொடுத்துள்ள மாதிரி புகைப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சரியான அளவின்படி புகைப்படங்கள் இருக்க வேண்டும். மேலும், புகைப்படத்தின் பின்னணி (Background) வெள்ளை நிறத்தில் இருக்க வேண்டும்.

33 mm



48 mm

புகைப்படங்களின் பின்புறத்தில் அருகே கொடுத்துள்ள மாதிரி விவரங்களை எழுதவும்.

| |
|---|
| CORAL |
| Your Name<br><br>As per Passport |
| KAILASH |
| |

## Specifications of passport size photo for Kailash Tour:

1. High Photo quality taken in the studio. (Not scanned)
2. White background.
3. No red eye effect.
4. Not too close.
5. Normal expression.
6. Straight pose with open eyes looking straight into the camera.
7. No eye glasses.
8. No ornaments like flowers.
9. Not in white dress.
10. Not uniform.
11. Size 33 mm from left to right x 48 mm top to bottom.
12. Request send 8 photos by courier.

**விசா தகவல் பாரத்தை இடம் விடாமல் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்**

***Note* Please Fill Up The Details Form Truly & Clearly And Don't Leave Out Any Details**

**Personal Information as Below**

| | | |
|---|---|---|
| **Applicant Name:** | | |
| **Passport No:** | **Place of Issue:** | **Email @:** |
| **Place of birth (Province, City):** | | |
| **Present Address (Province, City):** | | **Contact No:** |
| **Office Name:** | | **Office Contact No:** |
| **Position:** | **Joining & Retired Date (If retired):** | **Name of Director:** |
| **Office Address:** | | |

**Applicant Qualification Details:**

| Education | Major Subject | Name of Institute & Address |
|---|---|---|
| School/High/university | | |

| | | | |
|---|---|---|---|
| **(1) Father** | ⬇ **Name & Middle Name** | ⬇ **Surname** | **DOB (AD):** |
| | | | **Nationality:** |
| **(2) Mother** | ⬇ **Name & Middle Name** | ⬇ **Surname** | **DOB (AD) :** |
| | | | **Nationality:** |
| **(3) Spouse** | ⬇ **Name & Middle Name** | ⬇ **Surname** | **DOB (AD) :** |
| | | | **Occupation:** |
| **Nationality:** | **Place of Birth(Province, City):** | | |
| **(A) Children** | ⬇ **Name & Middle Name** | ⬇ **Surname** | **DOB (AD):** |
| | | | **Nationality:** |
| **(B) Children** | ⬇ **Name & Middle Name** | ⬇ **Surname** | **DOB (AD):** |
| | | | **Nationality:** |

| | |
|---|---|
| **Tibet Agent Name:** | |
| **Detail Address:** | |
| **Company Licence No:** | **Email @:** |
| **Contact No:** | **City & postal Code:** |
| **Emergency Contact Person Name (With in Family Member) :** | |
| **Relationship With the Applicant:** | |
| **Contact No:** | **Email @:** |

**Have you ever visited china or got Chinese visa:** ☐ **Yes** ☐ **No**

**Recent China Entry and Exit Details (if applicable).**

- **Latest China Visa Issue Date:**
- **Place of Latest China Visa Issue:**
- **Visa Number:**

**Country Visited in 12 Months:**

**Other Countries Valid visas in Passport:**

## எங்கள் விலாசம் :

Phone 90256 98963
CORAL HOLIDAYS,
Padmalaya Complex,
102, Railway Feeder Road,
Near Ramar Kovil,
VIRUDHUANGAR 626 001
Tamilnadu.

மேலும் தகவலுக்கு : +91 94433 43206

உடன் பதிவு செய்ய : +91 90256 98963

பெங்களூரு : +91 97426 62626

மதுரை : +91 94875 43206

மற்றும் தமிழ்நாடு பகுதிக்கு : +91 99524 10198